<u>***அசல் வழக்கு எண். 48/2009***</u>

*நாள் 16.08.2018*

**Name: *தர்மலிங்கம் (வா.சா.1 / வாதி)***

***சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.***

<u>*பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-*</u>

*என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 4 நபர்கள். அவர்கள் நான், என் தம்பிகள் சின்னதுரை அவர் இறந்துவிட்டார். அடுத்த தம்பிகள் அன்பழகன், ராஜேந்திரன். சின்னதுரை இறந்து 14 ஆண்டுகள் ஆகிறது. அவருக்கு மனைவி, 3 குழந்தைகள் உள்ளார்கள். நான் பரணம் கிராமத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் எனது 15 வயதுவரை தாவா சொத்து உள்ள கிராமமான கங்கவடங்கநல்லூர் கிராமத்தில் குடியிருந்து அதன்பிறகு பரணம் கிராமத்திற்கு சென்றுவிட்டேன். நான் பிராது தாக்கல் செய்திருந்த சமயத்தில் பிராதில் அன்பழகனும், சின்னதுரையும் இற்நதுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சின்னதுரை மட்டும்தான் இறந்துவிட்டார். நான், அன்பழகன், ராஜேந்திரன் பரணம் கிராமத்தில்தான் வசித்து வருகிறோம். நான் வழக்கில் கங்கவடங்கநல்லூர் கிராமத்தில் வசித்து வருவதாக பிராதில் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 7,8 பிரதிவாதிகளான ரவி, முருகன் சுமார் கடந்த 15 ஆண்டுகளாக சிங்கப்பூரில் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். அவ்வப்போது 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊருக்கு வந்து செல்கிறார்கள். எனக்கு குடும்ப சொத்துகளாக 5 ஏக்கர் 42 செண்ட் உள்ளது. இது அல்லாமல் பரணம் கிராமத்தில் 3 ஏக்கர் நிலம் உள்ளது. எனது குடும்பத்தில் தற்பொழுது வரை பாகம் பிரிக்கவில்லை.*

*(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சி சில மணிநேரம் நிறுத்தி வைக்கப்பட்டது).*

*(ஒப்பம்) திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*ஜெயங்கொண்டம்.*